செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி ௴ 28௨. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்

பிரதி விலை: சதம் 10.

தொலைபேசி: 356

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக௵ வைகாசி௴ ௧௧௨ வெள்ளிக்கிழமை (24-5-1968) [இலை-

ஸ்ரீ-ல-ஸ்ரீ

## தத்புருஷ தேசிகர் அவர்களும் சைவசித்தாந்தவகுப்பும்

பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

யாழ்ப்பாணத்தில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே, நாடோறும் மாலை ஐந்து மணிதொடக்கம் சைவ சித்தாந்த வகுப்பொன்று நடந்து வருகிறது. தேசிகர் அவர்கள் நடத்தி வருகின்றார்கள். அமிர்த பொக்கிஷமான சித்தியார் பாடம் நடக்கிறது

நாவலர் வித்தியாசாலையோடு ஐம்பது வருஷத்துக்கு மேற்பட்ட தொடர்பு எனக்குண்டு. 1917 கார்த்திகை தொடக்கம் 1927 புரட்டாசி வரை மேற்படி வித்தியாசாலையிலேயே வசித்து வந்தேன். மேலும் 1938 வரை நெருங்கிய தொடர்பு இருந்தது.

சைவ சித்தாந்தப் பேரறிஞரான சபாரத்தின முதலியார் அவர்கள் முதிர்ந்த பட்டதாரிகளுக்குச் சைவ சித்தாந்த பாடம் நடத்தியதும், சைவசித்தாந்த சமாஜம் வருடந்தோறும் நடந்து வந்ததும் நான் கண் குளிரக் கண்டவை,

அங்கே நடந்த, நடக்கின்ற வைபவங்களுள், நாவலர் பெருமான் சாந்தி எய்தி மனப்பூர்வமாக ஆசி வழங்குவதொரு வைபவம் உண்டேயானல், அது தேசிகர் அவர்கள் மேற்கண்ட வகுப்பை மரபுநெறி பிறழாது நடத்தும் வைபவமாயே இருக்கும் என்பதை எனது எழுபதாம் வயசில் தெட்டத்தெளியத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மகான் செந்திநாதையர் நாவலர் வித்தியாசாலையில் எட்டு வருஷம் தலைமை உபாத்தியாயராயிருந்தவர்; நாவலர் செய்த பிரசங்கங்களை எழுத்துத் தவருமல் எழுதிக் கொண்டவர். அவருடைய பெயரை ஈசான சிவாசாரியர் அவர்கள் உச்சரிக்கும்போது நாத் தழு தழுப்பதையும் கண் கலங்குவதையும் நாம் பலமுறை நேரே கண்டிருக்கின்றோம். அப்படிப் பட்ட சிவாசாரிய சுவாமிகளிடம் முறையாகப் படித்துத் தீக்ஷைகளும் ஆசாரியாபிஷேகமும் பெற்றவர்கள் தேசிகர் அவர்கள். ஞானப் பிரகாசருக்குப் பிறகு, தாய் நாட்டுக்குச் சென்று அரும்பெருந் துறவிகளாய், சைவ சித்தாந்த அநுபவ ஞானிகளாய், ஒழுக்க சீலர்களாய் விளங்கியவர்கள் இருவர். ஒருவர் இலக்கணம் சுவாமி; வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர். மற்றையவர் செப்பறைச் சுவாமி; வரணியை அடுத்த மந்துவிலைச் சேர்ந்தவர். இருவர் சுவாமிகளோடும் நெருங்கிய தொடர்பு படைத்தவர்கள் தேசிகர் அவர்கள். தேசிகர் வழி, நாவலர் வழி. தேசிகர் ஞான பரம்பரையால் நமது யாழ்ப்பாணத்தவரே யாவர்.

சைவ சித்தாந்தச் செல்வரான சொக்கலிங்கச் செட்டியார் நாவலரின் உத்தமோத்தம சீடர். அவர் சீடர் தேசிகர் என்பதும் நினைவு கூரற்பாலது.

நாவலர் வித்தியாசாலையில் சுன்னாகம் அ குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தலைமையில சிறந்தகொரு காவிய வகுப்பு நடந்து வந்தது. அவ் வகுப்பின் கடை மாணவன் நான். 1922-ல் புலவர் அவர்கள் மறையக் காவிய வகுப்பு ஒடுங்கியது நான் கலங்கவிழ்ந்த நாய்கன் ஆயினேன். என்னிலைமைக் கிரங்கிப் புலவர் அவர்களின் ஆடத்துக்கு வித்துவான் க. சுப்பையபிள்ளை நியமிக்கப்பட்டார். அவர் சேனவரையம் முதலிய கடின இலக்கணங்களையும் தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயத்தையும் எனக்குப் பாடஞ் சொன்னர். பரீட்சையிற் சித்தி எய்தினேன். அது நிற்க.

தொடர்ச்சி 2-ம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத ஞமம் நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்
—திருஞானசம்பந்த சுவாமிகள்

### நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்ற அமைந்த மனமே குறைவு அற்ற களஞ்சியம்.

## சமாச்சாரம்

### அகில இலங்கை வேதாகம சைவ சித்தாந்த சபை மகாநாடு

ஷெ சபையின் மகாநாடு வைகாசி மாதம் 21-ம் திகதி திங்கட்கிழமை 3-6-68) முற்பகல் 8-30 தொடக்கம பிறபகல் 5-00 வரை கீரிமலை வைத்தியலிங்கம மடத்தில் நிகழும். இம் மகாநாட்டில் பல சைவப் பெரியார்களுடைய உபந்நியாசங்கள் இடம்பெறும். சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களும இமமாநாட்டில் உரை நிகழ்த்துவார்கள். மகாநாட்டுக்கு வரும் அன்பர்களுக்கு மதிய உணவு வசதிகளைச் சபையார் ஒழுங்குசெய்துள்ளனர் (ந. நி.

### மகோற்சவம்

வண்ணார் பண்ணை மேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர் வரும் 1-6-68 சனிக்கிழமை ஆரம்பமாகி 10-6-68 திங்கட் கிழமை பூர்த்தி யெய்தும் 9-6-68 ல இரதோற்சவம நடைபெறும் காலை 9-30 மணிக்கு சுவாமி இரததில ஆரோகணித்துத் திரு வீதிஉலாக் கொள்வர்

### வருகை தருவார்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்ற விழாவிற் கலந்து கொள்வதற்காக "திருக்கோயில்" ஆசிரியர் ந. ரா. முருகவேள் அவர்கள் இம் மாதம 31 ம் உ தாயகத்திலிருந்து ஈழ நாட்டுக்கு வருகை தருவார் சேக்கிழார் விழா 1, 2-6-68 ல் யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

### அலங்கார உற்சவம்

புன்னாலை கட்டுவன் ஆயக்கடவைச் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் சித்திரை ௴ 27௳ (9-5-68) வியாழக் கிழமை ஆரம்பமாகி 10 நாட்கள் வரை சிறப்பாக நடைபெற்றது கதாகாலக்ஷேபம் மங்களவாத்திய இசை பஜனை என்பனதினமும் நடைபெற்றன.

## சமயத்துக்கும் போலிக்குஞ் சன்மப் பகை

[ பண்டிதர் மு. கந்தையா B. A. எழுதியது ]

சிவஞானிக்குஞ் சிவஞானிக்கு மிடையில் நிகழும் ஒழுகலாறே சிவனடியார்க்குஞ் சிவனடியார்க்கு மிடையில் நிகழும் ஒழுகலாறே சாதி குலம் பிறப்பு என்பவற்றின் முன்னிலையில் நடைபெற வேண்டுவதில்லை. அவர்க்கு வாய்ந்துள்ள திருவருளுறைப்பின் முன்னிலையிலேயே அது நடைபெறுவதாகும்.

சிவஞானிகள், சிவனடியார்கள் திருவருள் நெறியில் நிற்பவர்கள். நாமோ கன்ம நெறியில் நிற்பவர்கள். நம்மைக் கன்ம நெறியிற் செலுத்தும் நிலையில் திருவருள் கூடத் திரோதமலம் என்னும் பெயர்க்குள்ளாகையில் நாம் தூயராவது எப்படி? நம்மைத் தூய்மை செய்வதற்காக நம் கன்ம நெறியில் அமைந்ததே சாதியும். 'கன்ம நெறி மூன்று விதம் நற் சாதி, ஆயு, போகங் கடன தெனவரும்' — என்கின்றது சிவப்பிரகாசம். ஆகவே, சாதி குலம் பிறப்பின் வழி நிற்றலே நமக்கு ஆகும்.

ஞானிகள் சிவனடியார்களுக்குச் சாதி குலங் கடந்து ஒழுகும் நிலையிருந்தும் அவர்கள் அதனை எழுந்தமானத்துக்குக் கையாளாது, நம்போன்ற சாதாரண மக்களின் ஒழுகலாற்றுக்கு இடை யூறாகாத வகையில் மிக மிகச் சாவதானமாகவே கையாணடிருப்பது, பொதுவாக உண்மைச் சைவப் பெரியார் வரலாற்றிலும் சிறப்பாகத் திருஞான சம்பந்தர் வரலாற்றிலும் நாம் கண்டுகொள்ளவிருக்கும் பேருண்மையாகும். நீந்தனர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்போர் சம்பந்தப்பட்ட மட்டில் சிவபரம்பொருள்கூட அப்படியே நடந்தருளிய வரலாற்றுண்மை கூர்ந்துணரத் தக்கதாகும்.

"இப்பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி
முப்புரிநூல் மார்புடன் முன்னணைவாய்"
— திருநாளைப்போவார் நாயனார்புராணம். செய். 28.

"வாயில் வேறு வடதிசையில் வகுப்பப்
புகுந்து வணங்கினர்"
திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணம் செய். 8

'வித்வான் ந புத்திபேதம் ஜனயேத் அஞ்ஞானனும் கர்மசங்கனும்' — ஞானியானவன் கர்மத்தி லீடுபடு மியல்புள்ள அஞ்ஞானிகளுக்குப் (தன செயலால்) புத்திபேதத்தை யுண்டுபணணுத லாகாது — என்ற பகவத் கீதை இதற்கு மோகதும.

இது இங்ஙனமாக, நாமும் ஞானிகளின் சில செயல்களை உதாரணமாகச் சொல்லிக் கொண்டு அவ் வகையில் நடக்கலாம போலுமெனில் அது உண்மையாகாது, போலியேயாகும போலித்தனம் இருக்கும் திசையில் நலை வைத்துப் படுக்கவும் ஆசையாது சமயம். சமயத்துக்கும் போலிக்குஞ் சன்மப் பகை.

எனவே, திருஞான சம்பந்தர், திருநீலநக்கர், திருப்பாணாழ்வார் போன்ற பெயர்களைச் சாட்டிக் கொண்டு யாரும தம்மையும் பிறரையும மயக்கிக் கொள்ளாமற் காததருள எல்லாம வல்ல இறைவனை வேண்டுகின்றோம.

### மகா கும்பாபிஷேகம்

கண்டிக்கு, மாவை கந்தசுவாமி கோவிலிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமானதும் விநாயகப் பெருமானதும் திருவுருவங்கள் எதிர் வரும் 2-6-68 ல் கண்டி சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புதிதாய் அமைக்கப்பட்ட முருகன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டுக கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் மேற் கொள்ளப்பட்டு 6-6-68 வியாழக் கிழமையன்று மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறும். (ந. நி.)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

கீலக ஞ் வைகாசி மீ கக-உ வெள்ளிக்கிழமை [1968]


## சைவ சமய

## முதல் நூல்களை நிந்திக்கலாமா?

———0———

சென்றவாரத்திற் பிரசுரமான இந்துசாதனத்தில் 'திருஞானசம்பந்தர் காலத்தில ஆகமமில்லை யென்பது பெரும் பிழை' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது அக்கட்டுரை எழுதுவதற்குக் காரணங்கள கவிருந்தவை பேராசிரியர் திரு அ. ச ஞானசம்பந்தன் அவர்கள 11-5-68 ல் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நிகழ்ந்த இந்துமாமன்றத்தினது 13-வது வருடாந்த விழாவில் 'சமய வாழ்வு' என்னும் பொருளபற்றி உரையாற்றியபொழுது சைவாகமங்களைப்பற்றித் தவறான கருத்துக்களை வெளியிட்டமையும் சைவ சாதனங்களை இழிவுபடுத்திக் கூறியமையுமாகும். "சிவபெருமானே உலகததுக்குக கருத்தா அவர் ஆன்மாக்கள் ஈடேறும்பொருட்டு அருளிச்செய்த முதல நூல்கள் வேதம சிவாகமம் என்னும் இரண்டுமாம்" என நாவலர்பெருமான் தமது முதலாஞ் சைவவினாவிடையிற் கூறியுள்ளனர். வேத சிவாகமங்கள் இறைவனுடைய வாக்கு. அவை அநாதியானவை. தமிழ்மொழியிலுள்ள சைவத் தெய்வத் திருமுறைகள் வேத சிவாகமங்களின் கருத்துக்களையே கொண்டுள்ளன. திருமுறைகளை அருளிச்செய்த மெய்யடியார்கள் வேத சிவாகமங்களை உச்சிமேற் சூடித் துதித்தார்கள்.

ஆனல் தமிழிலுள்ள திருமுறைகளைப் போற்றுகின்ற சில தமிழன்பர்கள் இக்காலத்தில் திருமுறைகளாலே போற்றப்படுகின்ற வேதசிவாகமங்களை நிந்தனை செய்கின்றார்கள். அவர்களுடைய செயல் தமிழ்மொழித் திருமுறைகளையும் முன்னவற்றுடன் சேர்த்து நிந்தனை செய்வதாக முடியும.

இக்காலத்தில் ஆலயப் பிரவேசத்துக்குச் சார்பாக மேடைகளிற் பேசுகின்ற சிலர் இவ்வாறான பிழையைப் புரிகின்றார்கள. பாரதநாட்டில் ஆலயப் பிரவேசத்திற்குச் சார்பாகப் பிரசாரஞ் செய்தவர்களுள் பண்டிதர் மதன்மோஹன் மாலவியா தலைசிறந்தவர். வேதாகமங்களைச் சிறப்பாகக் கற்றவர். அவர் வேதசிவாகமங்களை நிந்தனை செய்யவில்லை. எங்கள நாட்டில் வேதசிவாகமங்களை நிந்தனை செய்பவர்கள் பண்டிதர் மதன்மோஹன் மாலவியா அவர்களுடைய கொள்கையைப் பினபற்றுவார்களாக. சிலர் வேத சிவாகமங்களையும் சைவ சாதனங்களையும் நிந்தனை செய்வதினலும், சைவக் குருமார் தங்கள கடமையைப் புரியத் தவறுகிறார்கள். குருத்துவத்தை இழிந்த தொழிலாகவும் மதிக்கின்றார்கள, இந்தக் காரணங்களினல் சைவாலயங்களில நடைபெறும நித்திய நைமித்திகங்களினது முறைகளும் தவறுகின்றன. கோயில்களில் ஈசுரசாந்நித்தியம குறைந்துபோகின்றது. இன்னும் சிலகாலங்களில் சைவக்குருமார் வகுப்பே மறைந்துவிடும்போ லிருக்கின்றது.

சைவமக்கள் விபூதி உருத்திராக்கங்களை அணிய வெட்கப் படுகிறார்கள அவற்றையணிந்து கொண்டு நாரும் வீதிகளில் புறப்பட்டால மக்கள் அவர்களைப் பரிகசிக்கின்றார்கள். பறங்கியர் ஒல்லாந்தர் நமது நாட்டை ஆண்டகாலங்களில அவர்கள் நமது சைவாலயங்களை இடித்துத் தரைமட்ட மாக்கினர்கள. சைவ அநுட்டானங்களையும் விரதங்களையும் தடைசெய்தார்கள. ஆனல் அவர்களுடைய ஆளுகையின் பின்பு நம் முன்னேர்கள், அழிக்கப்பெற்ற ஆலயங்களைப் புனருத்தாரணம புரிந்தார்கள். சைவ அநுட்டானங்களையும் ஆசாரங்களையும் மீண்டும் கடைப்பிடித்தொழுகினர்கள். அங்ஙனம் கடமையாற்றுவதற்கு அவர்களிடத்திலுள்ள கடவுள்பத்தியும் சைவசமயாபிமானமும் பேருதவிபுரிந்தன.

ஆனல் இக்காலத்தில் சைவர்களென்ற பெயரைக் கொண்டு வாழுகின்ற மக்களுடைய சைவாபிமானக் குறைவினலும் அறியாமையினலும் சைவாலயங்களும சைவாசாரியபரமபரையும மறையத் தலைப்படுகின்றன,

## சிவனடியலாற் பேணு எம்பிரான் சம்பந்தர்

நல்லை. மதுரைத் திருஞான சம்பந்தராதீனத்தில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் விழாவில் 18-8-68 ஞாயிற்றுக்கிழமையிரவு 8 மணியளவில் சிவ ஸ்ரீ தத்புருஷதேசிகர் அவர்கள் ஒரு சிறந்த விரிவுரையாற்றினர். அவருடைய சொற்பொழிவின சாரம்:—

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனரை முதன் முதல் உலகுக்கு அறிவுறுத்திய சுந்தரமூர்த்தி நாயனர் அவரை,

"வம்பறு வரிவண்டு மணநாற
மலருமதுமலிநற்
கொன்றையானடியலாற்பேணு
வெம்பிரான் சம்பந்த னடியார்
க்கு மடியேன்"

என்று கூறித் துதிக்கின்றனர். அவர் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக மதித்து வழிபட்டவர். சிவபிரானொருவரே யாவராலும் வழிபடுதற்குரியவர். சிவனொடொக்குந் தெய்வமில்லை. சிவனெனு நாமம் தமக்கேயுரிய செம்மேனியம்மான் என்று துதித்தனர் அப்பர் சுவாமிகள்.

நின்றன துரிமையை நிகழ்த்த
மேனமையா
லென்றனை யயன்றனையெண்ணு
வார்சில
ரன்றியு நின்னுடனேனேர்
தம்மைய
மொன்றெனு வேரினை
துரைக்கின ராசிலர்

சிவபெருமானுடைய இயல்புகளை பிரமதேவரிடத்திலும் விஷ்ணுவினிடத்திலும் சார்த்திக் கூறுகின்றார் சிலர். பிரமதேவனையும் மகாவிஷ்ணுவையும் பரபொருளென மதிக்கின்றனர் சிலர் அவ்வாறன்றியும் பிறரையும் சிவபெருமானுக்கு நேராகச் சிலர் கூறுகின்றனர். அது அவர்களுடைய அஞ்ஞானத்தினல் உண்டாகும் உணர்ச்சியாகும.

"சென்றுநாம் சிறுதெய்வம்
சேர்வோமல்லோம்
சிவபெருமான் திருவடியே
சேரப் பெற்றேம்'

என்று துதித்தனர் மாணிக்கவாசகசுவாமிகள்.

'ஒருவனைப்பற்றி ஓரகத்திரு' என்ற கொன்றைவேந்தன் திருவாக்கின்படி சிவபெருமானெருவரையே நாம் இடையருது சிந்தித்துப் புலன்களை அடக்கி அவருடைய திருவடிகளை யகத்தில் பதித்திருத்தல் வேண்டும்.

திருஞானசம்பந்த சுவாமிகள் பேரால் தாபிக்கப்பெற்ற இவ் வாதீனத்தில் நிகழும விழாவில் கலந்துகொள்ளத் திருவருள் கூட்டி வைத்திருக்கின்றது. அதனை நினைத்துப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்

தேவர்கள் சிவபெருமானை வழிபடுவது தாம் வாழ்வதற்கு. அவர்களுடைய வழிபாட்டினல் சிவபெருமானுக்கு ஒரு நன்மையுமில்லை. அதேபோலே திருஞானசம்பந்தப்பெருமானைத் துதிப்பதனல் எங்களுடைய அவிச்சைகள் நீங்கும். நாங்கள் சிவப்பேறடையலாம். அவர் சீர்காழிப் பிரம தீர்த்தக்கரையில் அழுதனமையைச் சேக்கிழார் சுவாமிகள் துதிக்கின்றனர். வேதநெறி தழைக்க அழுதார். சைவத்துறை விளங்க அழுதார். சைவாசாரிய பரம்பரை பொலிய அழுதார். அதன் காரணமாக உமாதேவியார் பொற்கிண்ணத்தில் அவருக்கு பர ஞானம் அபர ஞானமாகிய இரு ஞானமும் கலந்த பாலினை ஊட்டினர் சிவஞானம் சம்மந்தப்பட்டமையால் சிவஞான சம்மந்தரானர். அவரைக் குருவாகக் கொண்டு வாழுகின்றவர்கள் வீடுபேறடைவது நிச்சயம்.

இவ்விழா மூன்று தினங்கள்வரை இவ் ஆதீனத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தினமும் சிறந்த மேளக்கச்சேரிகளும் திருமுறை பசனை ஆதீன சமய வகுப்புகளில் கலந்துகொள்ளும் மாணவர்களது நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன. இந்த அருள் நிகழ்ச்சிகளில் ஏராளமான சைவ அடியார்களும் அபிமானிகளும் கலந்துகொண்டனர் மூன்றுதினங்களும் ஆதீனத்தி லிருந்து திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் எழுந்தருளி வந்து நல்லைச் சிவன்கோவிலில் திருமுலைப்பால் அளிப்பு, பொற்றுளம் பெறுதல், முத்துப் பந்தர் முத்துப் பல்லக்கு பெறுதல் ஆகிய காட்சிகள இடம் பெற்றன. (க. சி.)

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஸ்ரீலஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள்

வித்துவான் அவர்கள் சிதம்பரம் நாவலர் வித்தியாசாலையில் முறையாகத் தமிழும் சமஸ்கிருதமுங் கற்றவர். இங்கே நூற்றுக் கணக்கில் பண்டிதர்களை உறபத்தி செய்தவர். வித்துவ சிரோமணி கணேசையர் அவர்கள் இலக்கண விஷயங்களில் வித்துவான் அவர்களின் கருதத்தை அறிந்துகொண்டு இப்படிப்பட்ட வித்துவான் அவர்கள், தேசிகர் அவர்களின் சித்தியார் வகுப்பில், வெகு சிரத்தையுடன் கலந்து கொள்வதைக் கண்டதும் எனக்கு உள்ளங் காலிலிருந்து உச்சிவரை குளிர்ந்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்லறிவு படைத்த பெண்மணிகள் பலர் வகுப்பில் தவருது பங்குபற்றுகின்றார்கள். இதற்கு மேலே வகுப்பின் இன்றியமையாமையையும் பாடஞ் சொல்லுந் திறமையையும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. தேசிகர் அவர்களின் வருகை யாழ்ப்பாணத்தின் வரப் பிரசாதம்

நாவலருக்கு ஒன்று செய்யவேண்டும் என்பவர்களும். சைவ அபிமானிகளும, சைவ சமய பாடங் கற்பிக்கும் ஆசிரியர்களும, பண்டிதர்களும் இவ் வகுப்பிற பங்குபற்றி இதனை நிலைபெறச் செய்யக் கடவர்கள.

சித்தியாருக்குப் பின் இருபா இருபஃது நடக்க வேண்டுமெனபது எனது அவா. பதினன்கு சாத்திரங்களையும, சிவஞான பாடியத்தையும, திருமந்திரம உள்ளிட்ட திருமுறைகளையும் தேசிகர் அவர்கள தொடர்ந்து நடத்துதற்கு, யாழ்ப்பாணத்துச் சைவ மக்கள் முன் வந்து ஆவன செய்ய வேண்டும அதுவே நாவலர் பெருமானுக்குச் செய்யும நன்றிக் கடனகும்.

தொடர்ந்து சிலகாலம் தேசிகர் அவர்கள இங்கே வசிக்க உடன்படுவார்களாயின, உடனபடச் செய்ய முடியுமாயின, 'மிண்டிய மாயாவாதமென்னுஞ் சண்ட மாருதம்' மலய மாருதமாய் மாறும; 'உலகாயதன எனும் ஒண்டிறற் பாமபின கலாபேதத்த கடுவிடம' நீலகண்டத்தைச் சேரும.

'இது நல்ல சமயம! இனி வாய்க்காது சமயம!' என்பது நாவலர் பெருமானின் வாக்கு.

நாட்டில் எத்தனையோ கோயில்கள் கிலமுற்று விளக்கேற்றுதல்கூட நிகழாத நிலைமையி லிருக்கின்றன.

சைவமக்கள் இக்குறைகளை யுணர்ந்து திருந்தி வேதநெறியையும் சைவநெறியையும பூதபரம்பரையையும் பொலியச் செய்யக்கூடியவழியில் அவர்கள் செல்ல நடராசப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

### சுதுமலை ஸ்ரீ புவனேசுவரி அம்பாள் கோயில் 3-ஆம் திருவிழா

இக் கோவில் திருவிழா இன்று (24—5—68 வெள்ளிக்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 26-5-68 ஞாயிற்றுக்கிழமை 3-ஆம் திருவிழா பகல் விசேடபூசை அபிஷேகஆராதனைகளைத் தொடர்ந்து சுவாமி திருவீதி உலா வருதல் நிகழும். அன்றிரவு திருவிழாவில் விசேட மேளக்கச்சேரிகளும் பஜனை என்பனவும் இடம்பெறும். (க. சி.)

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பகிட்டு, நீயும் உண்ணு.

# பிணி தீர்க்கும் பெரு மருந்து

சைவப்புலவர் க. சிற்றம்பலம் (பாம்பு கடிவைத்திய நிபுணர் கொட்டடி)

நோய் நீக்குவதற்குத் தேவையான சாதனங்கள் மணி, மந்திர, ஔடதங்கள் என ஆன்றோர்கள் அருளிச் செய்தார்கள் இந்த மூன்றினுடைய தத்துவங்களை மூத்தர்களும், பத்தர்களும், சித்தர்களும, விளக்கியிருக்கின்றார்கள். இந்த மூன்றினையும் உள்ளடக்கியவாறு ஒரு பெருமருந்து இருப்பதை நாம எண்ணுவதில்லை. காரணம நாம மாயா மலங்களால் பந்திக்கப்பட்டிருப்பதால் தான் அவை நமக்குப் புலப்படாதவாறு அமைந்து இருக்கின்றன. இந்தப்புலால் உடம்புக்கு வ நம் நோய்க்கு மருந்து தேடியலைகின்றோம் நோய் கண்டதும் துன்பமடைகின்றோம். சாதாரண வைத்தியனிடம் சென்று நோய்க்கு மருந்து கொள்கின்றோம் ஆனால் எல்லா நோய்க்கும் வல்லவனும் எப்பிணிக்கும் அருமருந்தானவனுமாகிய வைத்தியநாதன் ஒருவனே உடல் நோய்க்கும், உயிர் நோய்க்கும் அருமருந்தாக அமைகின்றான். இதையே கண்குணர்ந்த பத்தர்கள் "அம்பலத் தரசே அருமருந்தே" எனக் கூறியுள்ளார்கள்.

அவனருள் கண்டு அவன் தாள் அடைந்த நாயன் மார்கள், மக்களின் வினைகளை நீக்க அருளிச்செய்த அற்புத ஔடதங்கள் திருமுறைத் திருப்பதிகங்களாகும். இந்தத் திருமுறைகள் அனைத்தும் திருஐந்தெழுத்தின் விரிவாகிய ஆற்றல் வாய்ந்த பெருமருந்துகளேயாகும். திருமுறையின் சொற்கள் ஒவ்வொன்றும் அருள்வடிவு பெற்ற திருமந்திரங்கள். அந்த உண்மையை அவர்கள் வாழ்ந்து காட்டிய காலங்களில், நீக்க முடியாத நோய்களைத் திருவருள் துணைகொண்டு நீக்கியமையையும், அவர்கள் செய்த அற்புதங்களையும் கொண்டு நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே நாம் ஒவ்வொரு நாயன்மாரிடமும் அவரவர்கள் கண்ட அருமருந்துகளை நாமும் கண்டு அவர்கள் பெற்ற இன்பம் நாமும் பெற்றுப் பெருவாழ்வுபெற்று பேரருள் கொண்டு, வல்வினை நீக்கி, நல்வினை பெற்று முத்தி தரும் பித்தனடி சேருவோமாக.

திருவடி தொடர்வோம்

நாவுக்கரசன் நல்லன சொலவான்; ஆண்டவன் நம்மை ஏன் படைத்தான் என்ற தத்துவத்தை நாம எல்லோர்க்கும எடுத்து விளக்குமாறு திரு அங்கமாலை அமைகின்றது அதனைப் பாடிப் பரவுவோமாகில் ஆண்டவன் எங்களுக்குத் தந்த ஒவ்வொரு அங்கத்தினது தத்துவங்களையும் காணலாம். தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கைகள், உடல், கால்கள், இவைகள் ஒவ்வொன்றையும ஆண்டவனின் சேவைக்காக அர்பணிப்பவன் தேடமுடியாத தேவனைத் தன்னுள்ளே தேடிக் கண்ட பேரின்ப வாழ்வைப் பெறுவான்.

நாவுக்கரசரை நலிய வைத்த சூலைநோயை நாதனின் நாமத்தால் நீக்கிய பதிகமூலம் நமது நோயையும் நீக்கும் வல்லமையை நாம் பெற முடியும. அப்பதிகத்தை அன்புடன் ஓதினல் வயிற்றோடு சம்பந்தப்பட்ட எந்தநோயையும் நீக்கும் வல்லமையைப் பெறுவோம்.

கூற்றாக வந்த நோயைத் தோற்றது செய்த தன்மை ஆற்றல்வாய்ந்த சூலைநோய் நீக்கிய பதிகத்துக்குண்டு. ஆகவே ஒவ்வொருபதிகமும் ஒவ்வொரு அருமருந்துகள். அந்த அருள் மருந்துகளாகிய பதிகங்களைத் தினமும் ஓதுவோமானல் நமது உடல் நோயும் நீங்கி உயிர் நோயும் நீங்கும். பேரின்பப் பெருவாழ்வு பெறுவோம்.

நாவுக்கரசர் விஷவைத்தியரானர்

அப்பூதியடிகள் அடியாரிடத்து அளவிலா அன்புடையவர் தமபணிகள் எல்லாம் அடியாரின் பணியாகக் கொள்ளும் பண்பாளர், திருநீலகண்டன் திருவருள் கொண்ட திருநாவுக்கரசரைச் சிந்தையில் கொண்டஒருதொண்டர் அவர்கண்ட அன்பை அகிலமும் காண ஆண்டவன் அருள் பெருக்கெடுக்கிறது.

விடம்தீர்க்கும் பதிகத்தை நாம் பக்தியுடன் ஓதினல் உலகிலுள்ள எந்த விட நோயையும் நீக்கும் வல்லமையைப் பெறலாம். எக்கொடிய விடமும் நம் உடலைத் தீண்டாத தன்மை வாய்ந்தவர்களாவோம் என்பது திண்ணம். படமுடை நாகத்தைப் படர்தலைமேல் வைத்த பரமனைப் பாடிப்பணிந்தால் விடமுண்டகண்டத்தான் வினை போக்கியருள் செய்வான் என்பது திண்ணமான திரு மந்திரமாகும்.

நாவுக்கரசனின் ஒவ்வொரு திருப்பதிகமும் அடியார்களின் அல்லல் அகற்றி, அருள் பெறச் செய்யும் அமைப்பாக இருப்பதை நாம்காணலாம்.

'பேராயிரம் பரவி வானோரேத்தும்
பெம் மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத் திண் சிலைகைக் கொண்ட
பேரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றுதே ஆற்றநாள் போக்கினேனே''

இப்பாடலின் தத்துவமே இறைவன் தனது அடியார்களுக்கு மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய்களை நீக்கும் வல்லபங் கொண்டவன் என்பதைப் பொதுப்படக் கூறி இறைவன் பெருமருந்தாகியமைந்த தன்மையைக் காட்டுகின்றது. ஆகவே நாமும் நாவுக்கரசரின் நல்வழிச் சென்று அவர் பெற்ற இன்பப் பெருந்தேனைப் பருகிப்பேரின்பப் பெரு வாழ்வு பெற்று வல்வினையை நீக்கி வாழ்வோமாக.

## வருகுது நல்லகாலம்!



பத்தர்: "போயா தினங்களில் மது ஒழிப்பை (முதலில் நடை முறைக்குக் கொண்டு வருதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம்(விரைவில்) மேற்கொள்ளுமாம்...! மதுபானக் கடைகளுக்கு அன்று மூடு விழாவாம்! 'செயற்கரிய செய்வர் பெரியர்' ...எதுவோ வந்து ஆகட்டும்!

சித்தர்: நல்லது! ....ஆனல் கோடக்கையிழுத்துக் கட்டிக்கொண்டுஒருகைபார்க்கக்கிழம்பிவிடுவினம்! ஒரு கடையமுடினலை டல கடைகளிலும்... இந்த மது விற்பனை நிகழாமலிருக்க வகை செய்யவேண்டுமே...! இது நம்மவர்க்கு எவ்வளவ கஷ்டம்...? போயா' தினத்தில்....... எங்கும எவரும் மறந்தும .... மதுவை உட்கோள்வதில்லையென்று சபதம் எடுத்துக்கொண்டா லென்ன?

"நாயன்மார் - நாதன்"


உ
சிவமயம்

## சேக்கிழார் நாயனர் குருபூசை

நாள்: வைகாசி மீ ௧௯ உ (1-6-68) சனிக்கிழமை.
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்

முற்பகல் 10 மணி சிவபூஜா மண்டபம் சிவபூசை
புராணபடனம: சேக்கிழார் நாயனர் புராணம்
மகேசுரபூசை

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம், 17-5-68
மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்


# அன்னை அபிராமியின் அருள்பெருகு திருவளம்

[ ஆசிரியர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா ]

(முன் வளர்ச்சி — 5)

### 25. உன்னைமறவாமல் நின்றேத்துவன்

படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழின் முதன்மை வாய்ந்த மும்மூர்த்திகளுக்கும் மாதாவே! மூவுலகத்திற்கும் அபிராமிதேவியென்னும் பெயர்புனைந்த தேவரீரே! உம்முடைய மெய்யடியார்களது பின்னைவே திரிந்து அவர்களை வழிபட்டுப் பிறவிப் பிணியாம் பெருநோயை நீக்க முற்பிறவிகளிலே சிவபுண்ணியங்கள் செய்து கொண்டேன் அத்தவங்காரணமாகத் தேவரீரை இம்மையிலே ஒருபோதும் மறவாமல் நின்று தோத்திரஞ் செய்து வணங்குவேன். இனி எனக்கு என்ன குறையுண்டு ஒருகுறையுமில்லையன்றோ!

### 26. என்நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்து

நறுமணங் கமழும் கடப்பமலர் மாலையைத் தரித்தருளும் கூந்தலையுடைய அபிராமிதேவியே! தேவரீருடைய திருவடிகளைத் துதிக்கும் மெய்யடியவர்கள் சாமானியரல்லர். அவர்கள் பதினன்கு உலகினையும் படைத்துக் காத்து அழிக்க வல்ல மும்மூர்த்திகளேயாவர் எனவே, நறுமணங்கமழும் தேவரீருடைய திருவடித் தாமரை மலர்களிற் சாத்தும் பொருட்டு நாயினுங் கடைப்பட்ட தமியேனது நாவினின்றும் தோன்றிய இவ்வந்தாதியாகிய பாமாலை தேவரீரது திருச்செவிகளுக்கு ஏற்றிய திறம் எவருக்கும் சிரிப்புக்கு இடமாயிற்றன்றோ!

### 27. சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவது

அபிராமி தேவியே! தேவரீருடைய இணைத்திருவடிமலர்களைச் சிரமேற சூடும திருத்தொண்டை எனக்கே வரையறுத்துத் தந்தருளினீர் அதன் காரணமாக, என்மன மாசுகளையெல்லாம தேவரீரது திருவருள் வெள்ளத்திலுற் கழுவியருளினீர். அதனல், அம்மனம் நெக்கு நெக்கு உருகுதற்கு ஏதுவாகிய மெய்யன்பு உண்டானமையால் மாயச்சூழ்வுக்குரிய பிறவிப் பெருக்கடலை அழித்தனினீர். இப்பேருதவிகள் புரிந்த தேவரீருடைய திருவருளைச் சிற்றறிவும் சிறுதொழில்களுமுடைய தமியேன யாதென்று சொல்லிபுகழுவேனே!

### 28. அரசந் தவநெறியும் சிவலோகமும் சித்திக்கும்

ஐந்தெழிலாகிய அருள்புரியும் கூத்தப்பிரானுடன் சொலலும் அதன்பொருளும பேதமற இசைவதுபோலத்தழுவும நறுமணப் பூங்கொடியாம அபிராமி தேவியே! அன்றலர்ந்த செந்தாமரை மலர்போலும் தேவரீரது திருவடிகளை அல்லும் பகலும் வழிபடும் மெய்யடியார்களுக்கு மாத்திரமே இடையில் அழியாத நீதி திறமபா அரசாட்சியும இடையரூத தவ ஒழுக்கமும் சிவபதப்பேறும் ஒருங்கே சித்திப்பனவாகும்.

(வளரும்)


## அடைவு நகை ஏலவிற்பனவு

அரசாங்க உத்தரவுடன், சக்கலாவோடை, காரைநகரில் அடைவுபிடிக்கும் கு. கந்தசாமி அவர்களின் அடைவுகடையில் 1965-ம் ஆண்டு தைமீ முதலாம் திகதி தொடக்கம் 1967-ம் ஆண்டு பங்குனி மீ 31-ம திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1968-ம் ஆண்டு ஆனி மீ 16-ம திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல பத்து மணி தொடக்கம் டீ அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர், 14-5-68
வை. எரம்பமூர்த்தி,
Auctioneer, ஏலவிற்பனையாளர்.
எம். 46 17 24-5-68.



யாழ்ப்பாணம்

## — ஐக்கிய அபிவிருத்தி —

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்றும் காலங்களை வரையறுத்து ஏற்படும்வட்டியும்முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14.
— மனேஜர்.

## Commission Sale
## கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டில் இல: 8647.

வல்வெட்டித்துறை திருச்சிற்றம்பலம் பொன்னுச்சாமி மகள் தங்கமணியம்மா —வழக்காளி

எதிராக

1. வல்வெட்டித்துறை ஐயாத்துரை காத்தாபுத்துவும்
2. பெண் நாகரத்தினமும் எதிரிகள்.

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப் படியும் இதன் கீழ் விபரிக்கப்படு மாதனம் 1968ம் ஆ ஆடி மீ 14 ந் உ திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்வெட்டித்துறையிறை ஞானதாறணி விபர 10, 5/8 ஷெ 10 5/8 ஷெ தோட்டம் 2 ஷெ விபர 14½. இப் பிரிவுகளில ஆட்சிப்படி கிழக்கரைவாயில் வடக்கரைவாசிக்கு விபர 9 குளி 9¾ இதில் மேற்கரைவாசிக்கு ஆட்சிப்படி விபர 4 குளி 13 7/8 இதில் வடக்குப் புறமாக அளவைப்படி விபர 2 குளி 8, ¼ நீக்கி மிகுதிக்கு விபர 2 குளி 5. 3/8 எல்லை கிழக்கு சின்னத்துரை பரஞ்சோதியுடையவாதனம். வடக்கு தாபிரராசா துரைராசா இடண பதியாவதிக்குடைய வாதனமும் இந்தக் காணிக்குப் போகவு வரவு செய்வதற்காக விடப்பட்ட 11 அடி அகலமுள்ள ஒழுங்கையும் மேற்கு கனகபிள்ளை பொன்னம்பலத்தத்துக்குடைய வாதனம். தெற்கு பொன்னுச்சாமி சோமசுந்தரத்தகுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகள் யாவும் ஒழுங்கையில் உரித்து.

| | | |
|---|---|---|
| தரட்சித்தொகை | ரூபா | 10062–50 |
| ரூபா 7000 -க்கு 28-5-65 தொடக்கம் 25-1-66 வரை | ரூபா | 414–75 |
| | | 10,477-25 |
| ரூபா 10477-25 க்கு 26-1-66 தொடக்கம் 2-5-67 வரை 5 வித வட்டி | ரூபா | 654-80 |
| | | 11132–05 |
| 3-5-67 ல் கொடுத்த தொகை | ரூபா | 1980-00 |
| | | 9152-05 |
| ரூபா 9152-05 க்கு 3-5-67 தொடக்கம் 12-11-67 வரை 5 வித வட்டி | ரூபா | 236-42 |
| | | 9388-47 |
| 12-11-67 ல் கொடுத்த தொகை | ரூபா | 3000-00 |
| | | 6388-47 |
| ரூபா 6388-47 க்கு 13-11-67 தொடக்கம் 23-4-68 வரை வட்டி | ரூபா | 141-89 |
| செலவு | | 407–27 |
| மொத்தம் | ரூபா | 6937-63 |

ஆ. சபாரத்தினம், J. P.
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

வடலிப்பாதி, தம்பளை
பருத்தித்துறை, 21-6-1968
எம 53 24—5—

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. செல்லப்பா கனகசிங்கமும் பெண்
2. பாக்கியமும் — அரியாலை யாழ்ப்பாணம் வழக்காளி

இல M. B. 8802 எதிராக

1. பொன்னம்பலம் ஐயாத்துரையும் பெண்
2. லெட்சுமியும் — கொழும்புத்துறை
3. வேலுப்பிள்ளை சுந்தரம்பிள்ளை — கொழும்புத்துறை எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டி M. B. 8802-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1968-ம் ஆ ஆனி மீ 19-ம் உ புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 3874/- ம் 30-1-67 தொடக்கம் 17-6-67 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 598/36

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கண்டுகுளி கோவிற் பற்று கொழும்புத்துறை இறை "குடி இருப்பு" கில, பர, 2ம் குளி 4 ம் தலைவாசலும் குடினியும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கணபதி, சாம்பநாதருக்கும் பங்காளிகளுக்கும் உரிய ஆதனம் மேற்கும் தெற்கும் தெரு. இவையடங்கலும் Regd: D 302/68

2. ஷெ இறை "குடி இருப்பு" கி, பர 3 ம் கிணறும், தென்னைகளும் செய்பயிர் வான் பயிர்களும், எல்லை கிழக்கு செல்லையா பெண் சரஸ்வதியின் ஆதனம் வடக்கு பொன்னம்பலம் ஐயாத்துரைபெண் லெட்சுமியின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு கணபதி செல்லையாவின் ஆதனம் இவையடங்கலும Regd: 236/177

யு. அ. எட்வேட்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்

காரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
18-5-68.
எம், 51 24-5

---

மலரயனுந் திருமாலுங் காணுமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 24—5—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

---

## தாமரை வதனன்

"பரமேசுர புத்திரனான ஷண்முகக்கடவுளே! ஆறுதாமரைப் புஷ்பங்களை உன் ஆறுமுகங்களுக்கு உதாரணமாகச் சொல்லலாம். அந்த முகங்களில் தோன்றும் புன் சிரிப்புகள் தாமரை மலரில் வரும் அன்னப் பட்சிகள் போன்றுள்ளன. அசைந்துகொண்டிருக்கும் கடைக் கண் பார்வைகளோ மலர்களில் தேனைக் கிரகிக்க வரும் அறுகால் வண்டுகளைப் போன்றுள்ளன உனது அதரமோ அமிர்தத்தைப் பிரவாகிக்கின்றது. ஆகையால் உனது வதனங்களுக்கு பூரண உவமை தாமரை மலர்களேயாகும். இவ்வாறு உனது முகக்கமலங்களைத் தியானம செய்பவர்களின் பிறவி நீங்கருணையால் பெரும் பயனை அடையும்.

— ஆதி சங்கரர்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—υ—

இல: M B 7145

காரைநகர் கிழக்கு களபூமி
1. V. குலசேகரம்பிள்ளையும் பெண்
2. இராசலெட்சுமியும் வழக்காளிகள்

எதிராக

காரைநகர் கரப்பெட்டியன் தறை 1. ஆறுமுகம் பொன்னம்பலம் (காலஞ்சென்றவர்) காரைநகர் கிழக்கு ஆறுமுகம் பொன்னம்பலம் கைம்பெண் வள்ளியம்மை இவர் தனது கணவனின் ஆதனங்களின் தத்துவகாரி தத்துவவழக்கு இல: 1904 டிஸ்திறிக்கோடு யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 7145-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1968-ம் ஆ ஆனிமீ 2-உ ஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 5505. 00 21–12–64 தொடக்கம் 10-8–65 வரைக்கும் ரூபாய் 3750 00 க்கு 8வீத வட்டியும அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 252. 49 சதமும் இவ் முதல் வட்டி ரூபாயில் ரூபா 2000 -ம் 8-2–66 ல் கொடுபட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு காரைதீவு கிழக்கிறை 'கரப்பிட்டியன் தறை' பர நில இரா 9¼ ம் வீடுகளும் கிணறும செய்பயிர் வான் பயிர்களும இதற்கு எல்லை கிழக்கு கந்தையா கைம்பெண் சிவகாமத்துக்கும், சிறு பரப்பினை ஆறுமுகத்துக்கும் உரிய ஆதனம் வடக்கு சிறு பரப்பினை ஆறுமுகத்துக்கும் கந்தப்பர் முருகேசுவுக்கும் இராமு நாகலிங்கத்துக்கும் உரிய ஆதனம். மேற்கு இராமு நாகலிங்கத்துக்குரிய ஆதனமும். ரோட்டும். தெற்கு நாகமுத்து கைம்பெண் சின்னப்பிள்ளைக்கும் வேலுப்பிள்ளை கதிரைவேலுக்கும் உரிய ஆதனம்.

பதிவு இல. C 321/120.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner, Valuer

16 A, அம்மன் ரோட்
சுந்தர்மடம் யாழ்ப்பாணம்.
எம். 54, 24-5

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. அப்பாத்துரை பஞ்சலிங்கமும் 2. பெண் பரமேஸ்வரியும் இருவரும் உரும்பிராய் வழக்காளி

வழ. இல: MB/ 7808 எதிராக

தம்பு. செல்லத்துரை உரும்பிராய் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B /7808-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1968 ஆ ஆனி மீ 21 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபாய் 1377/50 சதம் 16–11–65 தொடக்கம் 12–5-66 வரைக்கும் ரூபாய் 900/–க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 228 சதம் 15

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவில் பற்று ஊரெழுஇறை "குண்டிச் சியடி நில பரப்பு 7½ மேற்கு எல்லையிலிருக்கும் கிணற்றுப் பங்கும் துலா, ஆடுகாலங்கும் ஒரு தென்னையும். இந்தப்பரப்பு ஏழரைக்கும் எல்லை கிழக்கு கந்தன். கிருஷ்ண பிள்ளைக்கு உரிய ஆதனம் வடக்கு சுந்தரம்பிள்ளை பெண் தெய்வானைப் பிள்ளையினுதனம் மேற்கு கிணறும் இராசரெத்தினம் பெண் மீனாட்சிப் பிள்ளையினுதனம் தெற்கு கந்தையா பெண் அன்னலட்சுமியினுதனம்

(இதன் மிகுதிப் பாகத்தில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும் தெற்கு எல்லைக் காணியின் மேற்கு எல்லை ஓரமாக தெற்கே இருக்கும் ஒழுங்கைக்குப் போக ஐந்து முழ அகலம் கொண்ட பாதை உரித்தும் இதன் தெற்கெல்லை ஓரமாகப் புறநீங்கலாகவும்) அதைச் சேர்ந்தவைகளும் தெற்கெல்லைக் காணியின் மேற்கெல்லை ஓரமாக தெற் கொழுங்கைக்குப் போகும் ஐந்து முழ அகலம் கொண்ட ஒழுங்கை பாவிப் புரித்தும்.

"கமலபதி"
ஆஸ்பத்திரிவீதி. மண்டைதீவு,
8—5—68.

மு. நவரத்தினராசா.
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
எம். 49 24-5.

---

## பிஸ்கால் விற்பனை

இலக்கம்: எம். பி. 8700

மாவட்ட நீதி மன்றம், யாழ்ப்பாணம்

வல்லிபுரம் செல்லப்பா, நல்லூர், யாழ்ப்பாணம் வழக்காளி

விரோதமாக

1. மார்க்கண்டு மாலசிங்கம். (2) பெண் திலகம்மா - 265 ஆடியபாத ரோட், நல்லூர்
3. சுப்பிரமணியம் இராசையா (4) பெண் பொன்னம்மா ஆடியபாத ரோட், நல்லூர். —எதிராளிகள்

மேற் சொல்லிய வழக்கில் கோட்டால் அனுப்பப் பட்ட கட்டளைப்படி 1968–ம் ஆண்டு ஆனி மாதம் 13–ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இதன் கீழ் காணப்படும் ஆதனம் பிரசித்த வெந்தீசில, அக்காணிக்குள் நின்று விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 4755/–ம் அத்துடன் ரூபா 4000/–க்கு 22–12–66 தொடக்கம் 28–8-67 வரைக்கும் 8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் பணம் அறவிடும் வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 476/60–ம் பிஸ்கால் செலவுகளும் பவுண்டேசும் அறவிடப்படும்,

காணியின் பெறுமதி ரூபா 12,000/–

### காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று, நல்லூர் இறை "கனகுசியா தோப்பும் ஆடானைபார் வளவும்" நில. பர. 11. குளி 12–ம 1963-4-10 -ம சேர் வேயர் ஆ. இராசசாரியர் அளந்து வரைந்த 755–ம் இலக்கப் படத்தில் விபரித்த 1–ம் துண்டுக் குரிய நில பர. 1. குளி 14½ ம். ஷெ படத்தில் காட்டப் பட்ட வீட்டின் நடைகூடமும் அதற்கு மேலேயுள்ள மேல்வீடு இரண்டு அறைகளும கிழக்குப் போட்டிக்கோ அறையும் தெற்கு முழுவிருந்தையும் வடக்கு அரைவாசி விருந்தையும் நிலம் பயிர்வகைகளும். எல்லை கிழக்கு ஷெபடத்தல் ஆறுவது லொட்டும் தம்பு சுந்தரசாமியினுதனமும், வடக்கு தம்பு மகள் கனகபூஷணி அம்மாவினுதனம் மேற்கு தம்பு மகள் இராஜேஸ்வரியினுதனம் தெற்கு ரோட்டு. இதடங்கலும். (D 301/258)

தா. ச. வேதநாயகம்
பிஸ்கால் கந்தோர், வடமாகாண பிசுக்காலுக்காக
யாழ்ப்பாணம் 17-5-68

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கதிரவேலு செக்காதரம் பிள்ளை, வட்டுக்கொட்டை கிழக்கு — வழக்காளி

வழ.இல MB 5679 எதிராக

அப்பாக்குட்டி ராமசாமி — சங்கானை கிழக்கு எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 5679-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுகட்டளையின்படி, பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1968-ம் ஆ யூன் (ஆனி) மீ 23-ம் திகதி ஞாயிறுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியும் ரூபாய் 1064–ம் 23-5-63 தொடக்கம் 18–12-63 வரைக்கும் ரூபாய் 800 – க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகை இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 183 சதம் 62 1/2 யும். அதாவது ஏற்பட்ட செலவு ரூபாய் 125/- வெலியாத்துச் செலவு ரூபாய் 32 சதம் 87 1/2 இனி ஏற்படும் செலவு ரூபாய் 25 சதம் 75.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை கிழக்கு இறை "விலிசிட்டி" நிலப் பரப்பு 3. கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு முருகேசு இரத்தினத்தினுடைய ஆதனம் வடக்கு சுப்பிரமணியம் கைம்பெண் சிவக்கொழுந்தவின் ஆதனம் மேற்கு ரா. துரையப்பாவின் ஆதனம் தெற்கு ஆறுமுகம் கைம்பெண் பொற்கொடியின் ஆதனம் இது அடங்கலும் பதிவு இல. E 296/163

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
20-4-68

எ.பி பி எதிர்மன்னசிங்கம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
எம். 52. 24—5—68